மக்கள் நீதி மய்யம்
www.maiam.com /maiamofficial
PR/29092021/17/T
29 செப்டம்பர் 2021
சென்னை

# கடலூர் தீர்ப்பு
# ஆணவக்கொலை அநீதி அழியட்டும்!

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அருகே குப்பநத்தம் புதுக்கூரைப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த கண்ணகி, முருகேசன் ஆகியோர் காதலித்து மணம் புரிந்துகொண்டனர். இவர்கள் இருவரும் இருவேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், இவர்களின் காதலுக்கு கண்ணகி வீட்டாரிடம் எதிர்ப்பு இருந்தது. இந்த நிலையில், கடந்த 2003 ஆம் ஆண்டு கண்ணகியின் குடும்பத்தார் மற்றும் உறவினர்களால் காதல் தம்பதியினர் கொடூரமான முறையில் விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டதோடு, அவர்களின் உடல்களும் எரிக்கப்பட்டன.

தமிழகத்தில் பலத்த அதிர்வலைகளைக் கிளப்பிய இந்த வழக்கு சி.பி.ஐ வசம் ஒப்படைக்கப்பட்டு கடலூர் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடந்து வந்த நிலையில், இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நீண்ட நெடிய சட்டப் போராட்டத்தினை நடத்திய முருகேசனின் தந்தை சாமிக்கண்ணுவுக்கு மக்கள் நீதி மய்யம் ஆறுதலைத் தெரிவிக்கிறது.

பண்பாட்டுப் பெருமைகளை மூச்சடைக்கப் பேசும் நாம், ஒரு நாகரீகச் சமூகத்தில்தான் வாழ்கிறோமா எனும் சந்தேகத்தை ஆணவப் படுகொலைகள் உருவாக்குகின்றன. தனி மனிதர்களின் மனங்களில் மாற்றம் ஏற்படாமல் சமூக மாற்றம் சாத்தியமில்லை. சாதி, மத, வர்க்க பேதங்களுக்கு எதிரான உரையாடல்கள் தொடர்ந்து நிகழவேண்டும். தனிப்பட்ட ஆதாயங்களுக்காக சாதிய உணர்வுக்கு தூபம் போடும் மோசடி பேர்வழிகளிடம் தமிழ்ச் சமூகம் பலியாகிவிடாமல் இருக்கவேண்டும்.

சமத்துவமும், சமூக நீதியும், சம நீதியும் உலவும் சமூகத்தை நோக்கிய பாதையில் பயணிப்போம். பேதங்களற்ற நல்லிணக்கச் சமூகத்திற்கான உரையாடலை மக்கள் நீதி மய்யம் தொடர்ந்து முன்னெடுக்கும்.

– மூகாம்பிகா ரத்தினம்
மாநில மகளிர் அணிச் செயலாளர்